சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 25.10.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 24/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-10 |
| சாட்சியின் பெயர் | : | வீரபரஞ்ஜோதி |
| தந்தை பெயர் | : | வைரக்கண்ணு |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| வயது | : | 63 |

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 17.05.2020 ஆம் தேதி நான் கொரடாச்சேரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில்

இருந்தபோது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று உடன் மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த மலையூர் வடக்கு தெருவை சேர்ந்த சூரியா என்பவர் தன்னை அடையாளம் தெரிந்த 2 நபர்கள் தாக்கி சாதியை சொல்லி திட்டியதாக கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்றுவந்து கொரடாச்சேரி காவல் நிலைய குற்ற எண் 912/2020-ல் இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) of IPC r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act-ன் படி 17.05.2020 ம் தேதி மாலை 6.30 மணியவில் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் ஒரு நகலை தஞ்சாவூர் முதலாவது மாவட்ட கூடுதல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேலும் இது பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் குற்ற வழக்கு என்பதால் புலன் விசாரணை அதிகாரி நியமிக்க வேண்டி கனம் திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வைத்துள்ளேன். நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது தொடர்பாக திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

கடந்த 16.05.2020 ஆம் தேதி அன்று மாலை 16.00 மணிக்கு சம்பவம் நிகழ்ந்ததாக நான் அ.சா.ஆ-7 ஆன முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் ஆமாம். சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்படும் ஊர் மலையூர் என்றால் சரிதான். மலையூரில் இருந்து கொரடாச்சேரி காவல் நிலையம் 5 கி.மீ தூரத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். கைபேசி மூலம் தொடர்பு கொண்டு தகவலை சொன்னால் 1 நிமிடத்தில் சொல்லிவிட முடியும். நேரில் சென்று கூற 15 நிமிடம் ஆகும் என்றால் சரிதான். 17.05.2020 ஆம் தேதி காலை 9.00 மணிக்கு எனக்கு நிகழ்வு சம்மந்தமான தகவல் மருத்துவமனையில் இருந்து எனக்கு கிடைத்தது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ-7 ஆன முதல் தகவல் அறிக்கையில் காவல் நிலையத்திற்கு 17.05.2020 தேதி 18.30 மணிக்கு தகவல் கிடைத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் வழக்கு பதிவு செய்த நேரத்தை குறிப்பிட்டுள்ளேன். நான் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்யததற்கு சிறப்பு காரணம் எதுவும் இல்லை என்ற சொன்னால் நான் உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெற்று வழக்கு பதிவு செய்ததால் காலதாமதம் ஏற்பட்டது. வழக்கு பதிவு செய்ய பிற நபர்களின் தூண்டுதல் காரணமாக வழக்கை காலதாமதமாக பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 16.05.2020 ஆம் தேதி மாலை 3.50 மணிக்கு இந்த 1ம் எதிரி நடராஜன் என்பவரை இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா-1 சூரியா மற்றும் 10 நபர்கள் தாக்கிவிட்டதாக கூறி 1ம் எதிரி நடராஜன் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் தகவலின் அடிப்படையில் நான் கடந்த 17.05.2020 ஆம் தேதி காலை 9.00 மணிக்கு மருத்துவமனைக்கு சென்று மேற்படி 1ம் எதிரி நடராஜனிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் ஆமாம். அந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் மாலை 6 மணியளவில் நிலைய குற்ற எண். 911/2020-ல் இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 506(2), 307 மற்றும் சொத்துக்கள் சேதப்படுத்தும் சட்டம் பிரிவு 3(1)-ன்கீழ் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். இந்த 1ம் எதிரியை அ.சா-1 மற்றும் 10 நபர்களும் தாக்கிய வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக அ.சா-1ம் ஒரு பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றும், அதை சரிவர பரிசீலனை செய்யாமல் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.10.25 17:30:45 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.